

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைத் தலைமைக்குத் தேர்வு செய்து தருமாறு, கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார். அந்த வகையில், **'என் உயிரினும் மேலான..!'** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர். ஆகஸ்ட் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் 17 மாவட்டங்களில் முதற்கட்டப் பேச்சுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. அடுத்து, வருகிற ஆகஸ்ட் 25, 26 மற்றும் 29 ஆகிய தேதிகளில் மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பில், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில், மாவட்ட வாரியான இரண்டாம் கட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதன் விவரம் வருமாறு :

### 25-08-2024, ஞாயிற்றுக்கிழமை

| வ. எண் | மாவட்டம், மாநிலம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | மேலிடப் பார்வையாளர் (மாநில துணைச் செயலாளர்) |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | எம்.எஸ்.கே.மஹால், ஜெ.என்.சாலை, (அரசு தலைமை மருத்துவமனை அருகில்), திருவள்ளூர்-1. | நாஞ்சில் சம்பத், தமிழ்மகன், சிங்கை பிரபாகரன் | ப.அப்துல்மாலிக் |
| | | எம்.எஸ்.கே.டைமன் மஹால், சரஸ்வதி நகர் பிரதான சாலை, திருமுல்லைவாயல், ஆவடி-62. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவை சம்பத் | |
| | | ஸ்ரீ வெங்கடேஷ்வரா திருமண மண்டபம், சென்னை நெடுஞ்சாலை, பொன்னேரி-4. | வழக்கறிஞர் அருள்மொழி, தமிழ் காமராசன், நாகை நாகராஜ் | |
| 2 | திருவண்ணாமலை | ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபம், வெங்கிக்கால், திருவண்ணாமலை-4. | கோவி.செழியன், டி.அருள்எழிலன், ஆடுதுறை உத்திராபதி | க.பிரபு |
| | | | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பத்மப்ரியா, கந்திலி கரிகாலன் | |
| | | | கடலூர் இள.புகழேந்தி, பிரகதீஸ்வரன், ஆரணி மாலா | |
| 3 | வேலூர் | பேபி மஹால் திருமண மண்டபம், மாசிலாமணி முதலியார் ஹாஸ்டல் சாலை, மாநகராட்சி அலுவலகம் அருகில், வேலூர்-1. | திண்டுக்கல் லியோனி, நீரை மகேந்திரன், கரூர் முரளி | க.பிரபு |
| | | | சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபீசுல்லா, ஈரோடு இளையகோபால் | |
| 4 | திருப்பத்தூர் | ஸ்ரீ கோகுலம் மஹால், சின்னக்கல்லுப்பள்ளி. (ஜெயின் கல்லூரி அருகில்) வாணியம்பாடி, திருப்பத்தூர்-51. | வி.சி.சந்திரகுமார், செந்தில்வேல், வழக்கறிஞர் கணேஷ் பாபு | க.பிரபு |
| | | | டி.செங்குட்டுவன், குடியாத்தம் புவியரசி, வரவணை செந்தில் | |
| 5 | ஈரோடு | கலைஞர் அறிவாலயம் & தளபதி மன்றம், மணல்மேடு வீதி, ரயில் நிலையம் அருகே, ஈரோடு-1 | பரந்தாமன் எம்.எல்.ஏ., கவிஞர் சல்மா, தூத்துக்குடி சரத்பாலா | பி.எஸ்.சீனிவாசன் |
| | | | பொன்.முத்துராமலிங்கம், அமுதரசன், சுகுணா திவாகர் | |
| 6 | கிருஷ்ணகிரி | குறிஞ்சி மஹால், மேட்பண்டா ரோடு, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் பின்புறம், கிருஷ்ணகிரி. | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., ஈரோடு இறைவன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | கே.இ.பிரகாஷ், எம்.பி., |
| | | | தாயகம் கவி எம்.எல்.ஏ., மருத்துவர் யாழினி, சௌமியன் | |
| | | சூடப்பா கல்யாண மண்டபம், ஒசூர் உள்வழிச் சாலை, மத்தம் சாலை, ஒசூர். | குத்தாலம் அன்பழகன், பொள்ளாச்சி சித்திக், சேர்க்காடு கென்னடி | |
| | | | நெல்லிக்குப்பம் புகழேந்தி, வழக்கறிஞர் சரவணன், நாகை சாகுல் ஹமீது | |
| 7 | நாகப்பட்டினம் | டி.பி.ஜி.கல்யாண மண்டபம், பெருமாள் வடக்கு வீதி, நாகப்பட்டினம்-3. | முனைவர் சபாபதிமோகன், மதிவதனி, பன்னீர்பெருமாள் | நா.இளையராஜா |
| 8 | மதுரை | பி.ஆர்.மஹால், ஆலாத்தூர் ரேசன் கடை எதிர்புறம், திருமால்புரம் அஞ்சல், மதுரை-14. | வே.மதிமாறன், புதுக்கோட்டை விஜயா, இந்திரகுமார் தேரடி | இன்பா ஏ.என்.ரகு |
| | | | பொள்ளாச்சி உமாபதி, சிவ.ஜெயராஜ், மில்டன் | |
| 9 | சிவகங்கை | அபூர்வா மஹால், சுப்பையா அம்பலம் சாலை, கண்ணதாசன் நகர், காரைக்குடி, சிவகங்கை-1 | கம்பம் செல்வேந்திரன், உமா, போடி காமராஜ் | ஜி.பி.ராஜா |
| | | | சேலம் சுஜாதா, சூர்யா சேவியர், மகிழ்நன் | |

### 26-08-2024, திங்கள்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் | ஜி.எஸ்.நாயுடு மீட்டிங் ஹால், ரவுண்ட் சாலை, மென்டோன்சா காலனி, திண்டுக்கல்-3 | பொள்ளாச்சி உமாபதி, சிவ.ஜெயராஜ், மில்டன் | சி.ஆனந்தகுமார் |
| | | | வே.மதிமாறன், புதுக்கோட்டை விஜயா, இந்திரகுமார் தேரடி | |
| 2 | புதுச்சேரி | எம்.கே.எஸ்.ரோஸ்மா திருமண நிலையம், லால் பகதூர் சாஸ்திரி தெரு, பாண்டிச்சேரி-1 | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பத்மப்ரியா, கந்திலி கரிகாலன் | க.பிரபு |
| | | | 'புதுகை பூபாளம்' பிரகதீஸ்வரன், டி.அருள்எழிலன், ஆடுதுறை உத்திராபதி | |

### 29-08-2024, வியாழக்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | ஹோட்டல் பீமாஸ் வைஸ்ராய், பாரதி நகர், ராமேஸ்வரம் பிரதான சாலை, இராமநாதபுரம்-3 | முனைவர் சபாபதிமோகன், அமுதரசன், மருத்துவர் யாழினி | ஜி.பி.ராஜா |
| | | | வே.மதிமாறன், உமா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி | |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 24–08–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி




காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டியை கழகப் பொருளாளரும், கழக மக்களவை குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு மற்றும் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் தலைமை ஆசிரியர்கள் உள்ளனர்.

விண்ணப்பித்த தகுதியுள்ள அனைவருக்கும் மின்னணு அட்டைகள்!

# புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கப்படுகின்றன!

## உணவு - உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை, ஆக. 25 -

புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கப்பட்டு வருகின்றன என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்ற பின்பு இதுவரை 15,94,321 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் த்தொகைத் திட்டத்திற்கான பயனாளிகள் குடும்ப அட்டையை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுக்கப்பட்டதால், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மாறுபடா மல் பராமரிக்கப்பட்டதையொட்டி 06.07.2023 முதல் புதிய குடும்ப அட்டைகள் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிக்கும் பணியும் ஏற்கனவே அச்சடிக்கும் நிலையிலிருந்த குடும்ப அட்டைகள் அச்சடிக்கும் பணியும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

ஆனாலும் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 17,197 குடும்ப அட்டைகள் டிசம்பர் 2023 மாதத்தில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அதேபோன்று வெள்ளம் பாதிக்கப்பட்ட திருநெல் வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 10,380 குடும்ப அட்டைகள் டிசம்பர் 2023 மாதத்தில் அச்சடிக்கப்பட்டு வழங்கப் பட்டன.

மார்ச் 2024 மாதத்தில் 45,509 குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. இடையில் நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறைகளின் காரணமாக விண்ணப்பங்க ளைச் சரி



பார்த்தல் மற்றும் ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவியதால் தேர்தல் முடிந்த பின் கள விசாரணை மற்றும் விண்ணப்ப விவரங்கள் சரிபார்க்கும் பணி முடுக்கி விடப்பட்டன. நாளது தேதி வரை பெறப்பட்ட 2,89,591 விண்ணப்பங்க ளில் 1,63,458 புதிய குடும்ப அட்டை விண்ணப்பங்கள்

கள விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, 92,650 விண்ணப்பங்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட 24,657 விண்ணப்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட இதர விண்ணப்பங் களுக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வருகின்றன. மீதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் தொடர்ந்து கள விசாரணையும் விண்ணப்பங்கள் சரிபார்க்கும் பணியும் விரைந்து நடந்து வருகின்றன.

ஆதலால், சிலர் கூறுவது போல் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குவதில் எவ்விதத் தாமதமும் இல்லை என்பதையும் விண்ணப்பித்த தகுதியுள்ள அனைவருக்கும் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் விரைந்து வழங் கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.